**PROCEEDINGS OF THE PUBLIC HEARING HELD BY 11.00 AM ON 25.06.2009 AT THE COMMUNITY WELFARE HALL OF ANJUGRAMAM TOWN PANCHAYAT, KANIMADAM, ANJUGRAMAM, KANYAKUMARI DISTRICT FOR MINING OF RARE MINERALS BY M/S. CHANDRAKALA FARM PRODUCTS PVT. LTD, AZHAGAPPAPURAM VILLAGE, AGASTHEESWARAM TALUK, KANYAKUMARI DISTRICT.**

Present: **Thiru Rajendra Ratnoo, I.A.S.,**
District Collector,
Kanyakumari District.

Participants : List enclosed vide **Annexure - I**

At the outset, the Assistant Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Nagercoil welcomed the District Collector, Kanyakumari District and the public. Further, he informed that as per the letter of Ministry of Environment and Forests, Government of India dated 08.01.2008 and in accordance with Environment Impact Assessment Notification, 2006, Public Hearing is conducted today on 25.06.2009 for the mining of rare minerals over an extent of 2.135 Hectares by M/s. Chandrakala Farm Products Pvt. Ltd., at R.S. No. 1098 / 4, 1125 / 3, 1125 / 4 and 1124 / 4, Azhagappapuram Village, Agastheeswaram Taluk, Kanyakumari District at the Community Welfare Hall of Anjugramam Town Panchayat, Kanimadam, Anjugramam, Kanyakumari District.

Further, he informed that the project representative will explain about the project and the summary of Environmental Impact Assessment Report. He also informed that the public will be subsequently called for seeking details, information and to express their opinion. He also requested the public to inform their name and village before starting their views. He further requested the public to express their opinion directly while recording their views.

In continuation, he requested the project representative of M/s. Chandrakala Farm Products Pvt. Ltd. to explain about the proposed project and summary of the Environmental Impact Assessment.

**Thiru A. Vaiyapuri, General Manager, M/s. Chandrakala Farm Products Pvt. Ltd:**

He explained on the company's present share market business and on the membership in National Stock Exchange. Further, he informed that the Proponent of the Company Thiru Jeyachandran, belongs to Kalladivilai nearer to Thengamputhoor. He further informed that the company owns 25 acres of land in Azhagappapuram Village of Kanyakumari District and on the unit's proposal to start mining project. He also informed that in 2003, the firm had decided to start rare mineral mining with relevant permission from the Government. He also informed that the company had applied to Government of India and the public hearing is being conducted based on their advise. Further, he informed that Thiru. K. Sekar, Consultant of the Company will explain necessary details of the project.

**Thiru K. Sekar, Consultant, M/s. Chandrakala Farm Products Pvt. Ltd:**

He informed that this project has applied to State Government on 16.06.2003 for mining of rare minerals such as Garnet, Ilmenite and Rutile over an extent of about 5.5 Acres under applicable rules and to Ministry of Environment Forests, Government of India for its environmental clearance on 25.09.2007. Further, he informed that the company has been advised to conduct public hearing and to prepare Environmental Impact Assessment Report vide Government of India letter dated 08.01.2008 as decided in 60$^{th}$ Expert Committee Meeting of Ministry of Environment and Forests, Government of India.

He informed that the proposed mining site is located in Azhagappapuram Village, Agastheeswaram Taluk, Kanyakumari District.

He also pointed out the important places around the site in the projected map. He informed that the project site is located at about 200 meters from Rasthakadu hamlet 1.1 km from Kanyakumari National Highway and connected by road from Anjugramam.

As the project needs clearance from Coastal Regulation Zone, the map showing the demarcation of area with reference to HTL has been prepared through Anna University, Chennai.

Further, he explained that the project site is not located in sea shore or public land, and it is located at 30 feet away from the sea. He informed that the unit's production capacity is 15 Tonnes / Day or 3000 Tonnes per year with manual mining only, with maximum mining depth of 2.5 meters and no mining equipment will be used.

He informed that there is no protected sanctuaries around 10 km from the site and Reserved Forests is located at 5.5 km in the South.

He informed that the project site is located 1.1 km from Kanyakumari National Highway, 6 km from Kanyakumari, 15 km from the District Headquarters of Nagercoil and 1.1 km from Vattakottai, an Archeologically important place in which no mining is permitted in the distance of 100 meters and in 300 meters whereas, the site is located at about 1.1 km.

Further, he informed that there is no river or odai crossing the site.

He informed that the beach sand in Kanyakumari District sea shore has heavy mineral deposit of 53 % and light mineral deposit of 47 % and in this heavy minerals, Garnet, Ilmenite and Rutile are available. He further informed that the proposed production capacity will be 3000 Tonnes per year with heavy minerals 1590 Tonnes per year which accounts 53 % and the remaining rejects with 1410 Tonnes per year, which accounts 47 %.

(The District Collector sought clarification about red marked area in the map and the consultant explained that those red marks indicate habitations, like Anjugramam, Mettukudiyiruppu etc.)

He informed that mining process will be carried in 6 meters width, 13 meters length, with maximum depth of 2.5 meters and there will not be any impact in ground water as ground water is in 4 to 10 meters. He also informed that no machineries will be involved in mining process.

He informed that an impact study around 10 km radius was conducted by a team with Prof. Arusamy of Bharathidhasan University and Dr. Sri Kumar of Botanical Survey of India with inspections and necessary details and summary reports were prepared and displayed.

He also informed that data collected at 10 places to assess the impact on Air Quality and Noise.

He informed that the land use pattern about 38 per cent of the land comes under dry and wet agricultural land.

While explaining about anticipated Environmental Impact, he informed that no machineries will be used in mining process, employing only 5 to 7 labourers for mining, 200 liters per day of water will be required, electricity will not be used, no trade effluent will be generated and 50 liters per day of sewage will be treated through septic tank.

Further, he explained that the project site is a waste coastal sandy land, no Government land will be involved, no alteration or resettlement will be required, no change in the seashore, no large industry is located nearby, 50 people will be given with indirect employment, and opportunity for the local economical development through foreign exchange and taxes.

Further, he informed that production of 15 Tonnes / Day of sand will result in 7 Tonnes / Day of rejected sand, which will be filled up stage by stage in the mined pits and greenery will be developed on the top of the filled up pit.

He also informed that the rejects will be handled over to M/s. Indian Rare Earths, if it contains Zircon and Monozite.

He further informed that there will be no impact due to radiation as the background radiation is already in the range of 0.3 to 60 microGrey.

He informed that the project was already displayed in the website of Tamilnadu Pollution Control Board and in the dailies of New Indian Express and Daily Thanthi dated 22.05.2009.

He further informed that the estimate of the project is Rs.15 lakhs, allocation of 1 lakh per year for environmental study, 1 lakh per year for socio-economic development welfare, and Rs.50000/- per year for welfare of employees. He also requested the public to express their views about the project.

**PUBLIC OPINION:**

**Thiru C. Thangapandian, School Teacher, Kanimadam:**

He informed that he came to the meeting as he came to know the District Collector's meeting is conducted for the Chandrakala Unit. He said that the consultant of M/s. Chandrakala Farm Products Pvt. Ltd. informed only about the merits of the project, not mentioned the negative aspects. He further said that the public knew the impacts due to existing M/s. VV Mineral Company and said that the impacts are not directly but indirectly. The ground water became salty ever since mining started and whether or not agricultural lands are affected, there is an environmental damage, and people became diabetic. He said that there is no potable water and Health Department has to act according to the degree of salinity. He also informed that roads are getting damaged within a year, unlike earlier period wherein the new roads withstood 7 to 8 years, due to plying of over loaded sand lorries, operated by VV Minerals. He also said that there was a big accident before 3 months, with one causality. He also informed that the aesthetic view of the sea shore was good before VV Minerals and it became a rocky place, the sea water came out for 100 meters as mining is being carried out upto 10 meters depth, sea water came upto village during Tsunami. He also informed that complaint petitions against the unit were already submitted to the District Collector. He also pointed out that the employment opportunity to 50 people as mentioned by the unit's consultant and informed that already there is a good demand for labourers in this area, and so, to protect the beach he informed that they dislike the project.

Thiru K. Sekar, Consultant of M/s. Chandrakala Farm Products Pvt. Ltd. replied that the company is not a large one or a large mining project. He also informed that the proposed mining will be about only on 5.5 acres and only one lorry load of sand will be carried every day, the proposed site is not in the seashore, the site is located in owned land. He also said that as the mining activity is proposed to a maximum depth of 2.5 meters, there will be no adverse impact on ground water, and no impact as the activities will be done in own land only.

**Thiru Narayanan, Variyoor, Anjugramam:**

He informed that the public earlier dug bore well upto 20 feet only and at present, even after digging bore well upto 80 feet, they are getting salt water only due to VV Minerals which was established before 10 years. He also informed that if permission is given to this new project at Rasthakadu, the ground water would become salty in the surrounding villages. He also informed that already the ground water has been becoming salty in the villages of Anjugramam Town Panchayat and hence he requested to cancel the project.

**Thiru Mahalingam, Kanimadam, Anjugramam Town Panchayat:**

He informed that people have kidney stone diseases due to rare mineral companies. He said that unlike the claims of the consultant, the site is not a waste land but with coconut trees. He also informed that drinking water is obtained from Pudukulam and Azhagappapuram area. (On clarifying the place of source of drinking water by the District Collector, he informed that the same is taken from Azhagappapuram area.) Further, he informed that the drinking

water is in tough state, the entire water will become as salt water due to this project, and hence he requested not to give permission to the project.
Thiru K. Sekar, Consultant of M/s. Chandrakala Farm Products Pvt. Ltd. informed that the project will not be in beach front, excavation upto 2.5 meters only, and there will be no adverse impact on ground water which is at about 4 to 10 meters.
Thiru Narayanan refuted the response of the consultant and informed that the statement given by the consultant is good to here, mining is done with JCP upto 20 meters in the nearby area, and the project proponent will say like this only at present, but in future they wouldn't follow. (On clarifying the depth of excavation without damage by the District Collector, he said that there will not be any adverse impact if they follow what they presented. Further, the district Collector requested the public to bring it to the knowledge of District collector directly through public vigilance team, as and when higher depth of excavation is noticed and said that priority will be given to the people.)
Further, Thiru Mahalingam informed that people get kidney stone problem due to the use of salt water and hence the project will not be appropriate.

**Tmt. Avudaiyammal, Sri Lakshmipuram**:
She said that no drinking water is available, all water became salt water, not able to cook the rice with the present water, scale formation in the vessels, no availability of potable water, to do the needful, and she expressed her desire to the District Collector to get good water before her death.

**Thiru S.P. Balan, 7th Ward Member, Anjugramam:**
He informed that he has been ward member since 3 years, the water supply to the Town Panchayat is from the bore well located at 5 km in the west. He also informed that bore wells have to be dug away from Mylaudy, if the project is permitted. Further, he informed that as pointed by Thiru Mahalingam, people get kidney stone ailments and the scale formation in the vessels due to the use of salt water. He also said that VV Mineral Company is the reason for it, and the public and the officials are telling like this, and hence he requested to prevent the project.

**Thiru C. Rajalingam, 10th Ward Member, Kanagappapuram**:
He informed that the people already have direct and indirect impacts due to the existing mining operation by the private company and informed that many complaints were made in this regard. Further, he informed that the water was good before 10 to 12 years and hence agriculture was also good. He also informed that all the ground water became salty in all places and coconut trees have no yield even it seems to be green. Further, he informed that the sea came 150 to 200 meters towards inside, the identity of shore has been lost, the impact by the existing one project is already high and the impact will become very high when the new project is permitted, and the public will not be benefitted.

**Thiru A. Vaiyapuri, General Manager of M/s. Chandrakala Farm Products Pvt. Ltd.:**
He pointed the opinions raised by the public on the damage of ground water due to mining of rare minerals, their hardships due to the existing company, and assured to operate their company in accordance with the permission and within the rules, mining in his own land, mining without any impact to ground water, and to run the business without affecting the environment. He also assured to provide employment, to do the needful as per the socio economic plan in the locality.
Further he assured in the presence of the District Collector that their company will not make any damage to the ground water and the environment by doing their business. (On clarifying the sand quantity and its rate by the District collector, the consultant replied that 8 Tonnes per day of rare minerals will be produced and the cost of it will be Rs. 40,000/ per

day. The District collector directed the project proponent to furnish written commitment on this issue.)

**SUMMARISING THE PROCEEDINGS OF THE PUBLIC HEARING:**

**Thiru P. Kirupanantha Rajan, Assistant Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Nagercoil:**

While briefing the proceedings of the public hearing, he pointed out the information stated by Thiru A. Vaiyapuri, General Manager of M/s. Chandrakala Farm Products Pvt. Ltd. on the company's involvement on share market, the conductance of public hearing based on the unit's application in 2003, owning of 25 acres of land, seeking permission for mining over an extent of 2.135 hectares. He also pointed out that the information stated by Thiru K. Sekar, Consultant of M/s. Chandrakala Farm Products Pvt. Ltd. on the need for public hearing, mining location, topo plan and its environment, mining by manual only, non use of machineries and about important place around 10 km.

(When pointed out the information on the non existence of stream or river in the site, the District collector has pointed out 7 water sources are in existence as per the map. The consultant of the project replied that there is no water source crossing the project site.)

Further, he pointed the information given by the consultant on the mining process, solid waste management, environmental management, impact of the project and its management, and budgetary allotment.

He also pointed the opinion expressed by Thiru C. Thangapandian, Teacher on the ground water depletion by the existing sand mining unit, health problems, frequent damage of roads, road accidents, damage to agriculture, change of aesthetic sea shore to rocky state, high impact prevalent, and on his stand not to accept the project.

Further he pointed on the opinion stated by the consultant on the project mining area is 5.5 acres, transportation of one lorry load of sand per day, no location of the project in the sea shore and mining in own land only.

He also pointed the opinion expressed by Thiru Narayanan, on the ground water damage due to the existing mining, and also about the damage already caused in the nearby area by the existing mining units.

He further pointed the opinion expressed by Thiru Mahalingam, Kanimadam on the kidney stone ailment to many people in the area, damage in coconut trees, the supply of drinking water from other villages, and on his request to stop the project. He pointed on the response given by the consultant on his reiteration on no appreciable damage will happen as mining depth will be upto 2.5 meters only. He also pointed the opinion expressed by Tmt. Avudaiyammal on the damage to ground water and as pointed out by Thiru C. Thangapandian, Teacher the opinion of change of ground water into salt water was also recorded. He also pointed out the suggestions made by the District collector to monitor the mining by village committee, comprising the villagers on the excess depth of mining.

He also pointed out the opinion expressed by Thiru S.P. Balan, Councilor on the damage of ground water due to further permission to sand mining, and there will be kidney stone ailment.

He also pointed out the opinion expressed by Thiru Rajalingam, Ward Member on the direct and indirect impacts on the environmental issues, loss of yield in coconut trees due to salt water, sea erosion of 150 meters to 200 meters, and on the results of heavy damages. He also pointed the opinion expressed on not to allowing the project.

He also pointed out the opinion expressed by Thiru A. Vaiyapuri, General Manager of M/s. Chandrakala Farm Products Pvt. Ltd. on no impact on drinking water due to their project, to carryout the project as per the permission, in accordance to the rules, the project's activity is

in their owned site with protection of the environment, and the employment opportunity as assured in the project .

Further, the District Collector called for further views of the public, if any.

Finally the Assistant Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Nagercoil thanked the district collector and public and the public hearing came to an end.

Further 5 (five) written petitions are received regarding the project and details are enclosed vide Annexure - II.

**Conclusion:**

Lot of concerns have been raised regarding apprehended impact on quality of ground water. The EIA report has ground water data only related to the entire District, not of the project site and surrounding. Further study is needed on this aspect and opinion of Ground Water Board is required before permission is given.

Annexure - I - List of participants.

Annexure - II – Details on the written petitions received.

Sd/- (P. Kirupanantha Rajan)
Assistant Environmental Engineer,
Tamilnadu Pollution Control Board,
Nagercoil.

Sd/- (Rajendra Ratnoo, I.A.S.)
District Collector,
Kanyakumari District.

**அரிய மணல் சுரங்கத்திற்காக, தி/ள். சந்திரகலா பார்ம் புராடக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், அழகப்பபுரம் கிராமம், அகஸ்தீஸ்வரம் வட்டம், கன்னியாகுமரி மாவட்டம் மீது, 25.06.2009 அன்று காலை 11.00 மணி அளவில் அஞ்சுகிராமம் பேரூராட்சி சமுதாய நலக்கூடம், காணிமடம், அஞ்சுகிராமம், அகஸ்தீஸ்வரம் வட்டம், கன்னியாகுமரி மாவட்டத்தில் நடத்தப்பெற்ற பொதுமக்கள் கேட்புரை கூட்டத்தின் நடவடிக்கைகள்.**

முன்னிலை: **திரு இராஜேந்திர ரத்னூ, இ.ஆ.ப.,**
மாவட்ட ஆட்சியர், கன்னியாகுமரி மாவட்டம்.
பங்குபெற்றோர்: பங்குபெற்றோர் பட்டியல் **இணைப்பு - I** ன்படி இணைக்கப்படுகின்றது.

துவக்கமாக, உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், நாகர்கோவில் அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களையும், பொதுமக்களையும் வரவேற்றார். தொடர்ந்து, இந்திய அரசின் சுற்றுச்சுழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் 08.01.2008 தேதியிட்ட கடிதத்தின்படியும், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை 2006-ன் படியும், அரிய மணல் சுரங்கத்திற்காக தி/ள். சந்திரகலா பார்ம் புராடக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், புல எண். 1098 / 4, 1125 / 3, 1125 / 4, மற்றும் 1124 / 4, அழகப்பபுரம் கிராமம், அகஸ்தீஸ்வரம் வட்டம், கன்னியாகுமரி மாவட்டத்தில் 2.135 ஹெக்டேர் பரப்பளவில் அமையவுள்ள அரிய மணல் சுரங்கம் குறித்தான பொதுமக்கள் கேட்புரை கூட்டமானது இன்றைய தேதியில் 25.06.2009 அன்று, உயர்திரு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் முன்னிலையில், அஞ்சுகிராமம் பேரூராட்சி சமுதாயநலக்கூடம், காணிமடம், அஞ்சுகிராமம், கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெறுவதாக தெரிவித்தார்.

மேலும், அக்கூட்டத்தில் முதலில் தி/ள். சந்திரகலா பார்ம் புராடக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தார், அமைய உள்ள திட்டத்தினை பற்றியும், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு சுருக்கம் பற்றியும் விளக்க இருப்பதாகவும் தெரிவித்தார். தொடர்ந்து, பொதுமக்கள் விபரங்களையும், விளக்கங்களையும் தெரிந்துகொள்ளவும், மற்றும் தங்களது கருத்துக்களை கூறவும் அழைக்கப்படுவர் என்றும் தெரிவித்தார். மேலும், பொதுமக்கள் தங்களது கருத்துக்களை துவங்கும்போது, தங்களது பெயர் மற்றும் ஊரினை தெளிவாக சொல்லி துவங்கவும் வேண்டுகோள் விடுத்தார். மேலும், தகவல்களை சொல்கிறபோது பொதுமக்கள் நேரிடையாக தங்கள் கருத்துக்களுக்கு வருமாறும் கேட்டுக்கொண்டார்.

அதைத்தொடர்ந்து, தி/ள். சந்திரகலா பார்ம் புராடக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தாரை, அமையவுள்ள திட்டத்தினை பற்றியும், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு சுருக்கம் பற்றியும் பொதுமக்களுக்கு விளக்குமாறு அழைத்தார்.

**திரு எ. வையாபுரி, பொது மேலாளர், தி/ள். சந்திரகலா பார்ம் புராடக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்:**

நிறுவனமானது, ஏற்கெனவே பங்குச்சந்தை வர்த்தகத்தில் ஈடுபட்டுவருவதாகவும், தேசிய பங்கு சந்தையில் உறுப்பினராக இருப்பதாகவும் தெரிவித்தார். மேலும் இந்நிறுவனம் தொழிலதிபர் திரு ஜெயச்சந்திரன் அவர்களின் கீழ் இயங்கிவருவதாகவும், அவர்களது ஊர் இப்பகுதியில் தெங்கம்புதூர் அருகிலுள்ள கல்லடிவிளை எனவும் தெரிவித்தார். மேலும், இந்த நிறுவனத்திற்கு, 25 ஏக்கர் இடமானது அழகப்பபுரம் கிராமத்தில் சொந்தமாக உள்ளது எனவும், தற்பொழுது இந்நிறுவனம் சுரங்கம் தொடர்பான திட்டத்தை துவங்க உள்ளதாகவும் தெரிவித்தார். இதன்படி, அழகப்பபுரம் கிராமத்தில் அரிய மணல் திட்டத்தினை ஆரம்பிக்க உள்ளது எனவும், 2003-ம் ஆண்டு விண்ணப்பித்து முறைப்படி அரசு அனுமதிகள் பெற்ற பின்பு சரியான முறையில் துவங்க இருப்பதாகவும் தெரிவித்தார். இதன்படி, மத்திய அரசின் அனுமதி பெற வேண்டி விண்ணப்பித்து, அவர்களது அறிவுரையின் பேரில், இந்த பொதுமக்கள் கேட்புரை கூட்டமானது பரிந்துரைக்கப்பட்டு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் நடத்தப்பெற்று வருவதாகவும் தெரிவித்தார். தொடர்ந்து, திட்டம் தொடர்பாக நிறுவனத்தின் ஆலோசகர் திரு சேகர் அவர்கள் விளக்குவார்கள் எனவும் தெரிவித்தார்.

**திரு கே. சேகர், ஆலோசகர், தி/ள். சந்திரகலா பார்ம் புராடக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்:**

இத்திட்டமானது, ஏறக்குறைய 5.5 ஏக்கர் பரப்பளவில் அரிய மணல் எடுக்க, விதிகளின்படி கார்னெட், இல்மனைட் மற்றும் ரூட்டைல் ஆகியவற்றை அகழ்ந்து எடுக்க மாநில அரசிடம்

16.06.2003 அன்று விண்ணப்பித்தாகவும், மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் அனுமதி பெற வேண்டி 25.09.2007 அன்று விண்ணப்பித்ததாகவும் தெரிவித்தார். மேலும், மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சக திட்ட வல்லுனர்களின் 60-வது கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு, சுற்றுச்சூழல் மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கவும், பொதுமக்கள் கேட்புரை கூட்டம் நடத்தவும் அவர்களது 08.01.2008 தேதியிட்ட கடிதம் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

உத்தேச திட்டமானது, 2.135 ஹெக்டேர் பரப்பில் அழகப்பபுரம் கிராமம், அகஸ்தீஸ்வரம் வட்டம், கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைய உள்ளதாக தெரிவித்தார்.

சுற்றியுள்ள அமைவிடத்தில் உள்ள முக்கிய இடங்களை திரையில் சுட்டி காண்பித்தார்.

திட்ட அமைவிடம், ரஸ்தாகாடு உட்குடியிருப்பு அருகில் ஏறத்தாழ 200 மீட்டர் தொலைவில் அமையவுள்ளதாகவும், கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையிலிருந்து 1.1 கி.மீ தொலைவில் அமையவுள்ளதாகவும், அஞ்சுகிராமம் ஊரிலிருந்து செல்ல உரிய சாலை உள்ளதாகவும் தெரிவித்தார்.

இத்திட்டத்திற்கு, கடற்கரை பாதுகாப்பு மண்டல அனுமதி தேவைப்படுவதால், சென்னையிலுள்ள அண்ணா பல்கலைக்கழகம் மூலம், அதிக பட்ச கடல் அலை கோட்டிலிருந்து, அதன் பகுதி வரையறுக்கப்பட்டிருப்பதாகவும், வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், திட்ட அமைவிடம் கடற்கரை இடமோ, பொது இடமோ இல்லை எனவும், கடலில் இருந்து ஏறக்குறைய 30 அடி தூரம் தள்ளி உள்ளதாகவும், அதிகபட்சமாக 2.5 மீட்டர் ஆழத்தில் மனிதர்களால் மண்வெட்டி மூலம் எடுக்கப்பட இருப்பதாகவும், இயந்திரங்கள் எதுவும் பயன்படுத்தப்படுவதில்லை எனவும், நாள் ஒன்றிற்கு 15 டன் அதாவது ஆண்டு ஒன்றிற்கு 3000 டன் அளவில் செயல்பட இருப்பதாகவும் தெரிவித்தார்.

திட்ட அமைவிடத்திலிருந்து, 10 கி.மீ. சுற்றளவில் பாதுகாக்கப்பட்ட சரணாலயம் எதுவும் இல்லை எனவும், 5.5 கி.மீ. தொலைவில் தெற்குப்பகுதியில் பாதுகாக்கப்பட்ட காடுகள் உள்ளதாகவும், பிற அதிமுக்கியத்துவ பகுதிகள் இல்லை எனவும் தெரிவித்தார்.

திட்டம், கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையிலிருந்து, 1.1 கி.மீ. தொலைவில் அமைய உள்ளதாகவும், கன்னியாகுமரியிலிருந்து 6 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளதாகவும், மாவட்ட தலைநகரான நாகர்கோவிலிருந்து 15 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளதாகவும் தெரிவித்தார். மேலும், புராதன சின்னமான வட்டக்கோட்டையிலிருந்து 1.1 கி.மீ. தொலைவில் உள்ளதாகவும், அவ்விடத்திலிருந்து 100 மீ. மற்றும் 300 மீ. தொலைவுகளுக்குள் மணல் அள்ளுவதற்கு அனுமதி இல்லை என்கிறபோதும், இத்திட்ட அமைவிடமானது 1.1 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இத்திட்ட இடத்திற்கு குறுக்கே ஓடைகளோ அல்லது நதிகளோ செல்லவில்லை என தெரிவித்தார்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கிடைக்கும் கடல் மணலில் எடை கூடிய கனிமங்கள் 53 சதவீதமும், இந்த எடை கூடிய கனிமங்களில் கார்னெட், இல்மனைட் மற்றும் ரூட்டைல் ஆகியன உள்ளதாகவும் தெரிவித்தார். உத்தேசிக்கப்பட்டுள்ள உற்பத்தி திறன் ஆண்டுக்கு 3000 டன் ஆகும். ஆண்டுக்கு 1590 டன் அதாவது 53 சதவீதம் எடை கூடிய கனிமமாகவும், ஆண்டுக்கு 1410 டன் அதாவது 47 சதவீதம் ஒதுக்கப்பட்ட கழிவாகவும் உள்ளதாக தெரிவித்தார்.

(மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள சிவப்பு பகுதியை குறிப்பிட்டு விளக்கம் கேட்கையில் அவை அஞ்சுகிராமம் மற்றும் மேட்டுக்குடியிருப்பு ஆகிய குடியிருப்புகளை குறிப்பிடுவதாக தெரிவித்தார்.)

அகழ்வு பணியில் 6 மீட்டர் அகலம் மற்றும் 13 மீட்டர் நீளத்தில், அதிகபட்சமாக 2.5 மீட்டர் ஆழம் வரை செய்யப்படும் என தெரிவித்தார். இங்கு நிலத்தடி நீர், 4 முதல் 10 மீட்டர் ஆழத்தில் இருப்பதால், நிலத்தடி நீருக்கு பாதிப்பு இல்லை எனவும் தெரிவித்தார். இத்திட்டத்தில் இயந்திரங்கள் பயன்பாடு எதுவும் இல்லை என தெரிவித்தார்.சுற்றுச்சூழல் பாதிப்புகளுக்காக, 10 கி.மீ. சுற்றளவிற்கு உள்ளவற்றை பற்றி பாரதிதாசன் பல்கலைக்கழக பேராசிரியர் ஆறுச்சாமி மற்றும் பொட்டானிக்கல் சர்வே ஆப் இந்தியா டாக்டர் ஸ்ரீகுமார் அவர்களை கொண்ட குழு ஆய்வு மேற்கொண்டு, உரிய விளக்கங்களும், அதைத்தொடர்ந்து சுருக்கமும் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

காற்று மற்றும் ஒலி பாதிப்பு அறிய, 10 இடங்களில் சேகரித்து விபரம் தந்துள்ளதாகவும் தெரிவித்தார்.
நில உபயோகத்தின்படி ஏறத்தாழ 38 சதவீதம் புஞ்சை மற்றும் நஞ்சை நிலமாகும் என தெரிவித்தார்.
எதிர்நோக்கப்படும் சுற்றுச்சூழல் தாக்கங்கள் பற்றி குறிப்பிடுகையில், இத்திட்டத்தில் இயந்திரங்கள் பயன்படுத்தப்படமாட்டாது எனவும், காற்று சூழலில் குறிப்பிடத்தக்க தாக்கங்கள் ஏதும் ஏற்படுத்தாது எனவும், 5 முதல் 7 ஆட்கள் மட்டும் அகழ்வு பணி செய்வார்கள் எனவும், நாள் ஒன்றிற்கு 200 லிட்டர் அளவிற்கு தண்ணீர் தேவைப்படுவதாகவும், மின்சாரம் பயன்படுத்தப்பட மாட்டாது எனவும், தொழிற்சாலை கழிவு நீர் உற்பத்தி எதுவும் இல்லை எனவும், நாள் ஒன்றிற்கு 50 லிட்டர் மனித கழிவு நீர் உற்பத்தியாகி, செப்டிக் டேங்க் மூலம் சுத்திகரிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.
இத்திட்ட அமைவிடம் விவசாயத்திற்கு பயன் இல்லாத கடற்கரை மணல்பரப்பு எனவும், அரசு நிலங்கள் எதுவும் இடம்பெறவில்லை எனவும், மறுசீரமைப்போ, இடப்பெயற்ச்சியோ இல்லை எனவும், கடலோர பகுதியில் எவ்வித மாற்றமும் ஏற்படுத்தாது எனவும், அருகில் பெரிய தொழிற்சாலைகள் ஏதும் இல்லை எனவும், மறைமுகமாக 50 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் எனவும், அந்நிய செலாவணி மற்றும் வரிகள் மூலம் உள்ளூர் மற்றும் அப்பகுதி பொருளாதார முன்னேற்றம் ஏற்பட வாய்ப்புள்ளது எனவும் தெரிவித்தார்.
மேலும், ஏற்கெனவே சொன்னது போல நாள் ஒன்றிற்கு 15 டன் எடுக்கப்படும் மணலில் வெளிவரும் 7 டன் கழிவு மணல், குழிகளில் படிப்படியாக கொட்டி நிரப்பப்பட்டு, அதன் மீது பசும்பரப்பு உருவாக்கப்படும் எனவும் தெரிவித்தார். சிர்க்கான், மோனோசைட் போன்ற கனிமங்கள் இருக்கும்பட்சத்தில் விதிகளின்படி, தி/ள். இந்தியன் அரிய மணல் ஆலையிடம் கொடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.
கதிர்வீச்சினால் பாதிப்பு இல்லை எனவும், பிற உபாதைகள் இருக்க வாய்ப்பு இல்லை எனவும் தெரிவித்தார். ஏற்கெனவே, பின்புல கதிரியக்கம் 0.3 லிருந்து 60 மைக்ரோ கிரே ஆக இருப்பதால் பாதிப்பு இல்லை என்றும் தெரிவித்தார்.
திட்டம் பற்றி தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் இணையதளத்திலும், 22.05.2009 தேதியிட்ட இந்தியன் எக்ஸ்பிரஸ், தினத்தந்தி நாளிதழ்களில் வெளியிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.
இத்திட்டத்தின் மதிப்பு ரூ.15 லட்சம் எனவும், ஆண்டு ஒன்றிற்கு சுமார் 1 லட்சம் சுற்றுச்சூழல் ஆய்விற்காகவும், சமுக பொருளாதார மேம்பாட்டிற்காக ஆண்டுக்கு ரூ. 1 லட்சமும், தொழிலாளர் நலத்திற்காக ஆண்டுக்கு ரூ. 50,000 ஒதுக்கீடு செய்யப்படும் எனவும் தெரிவித்தார். மேலும் இது குறித்த பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை கூறலாம் எனவும் கேட்டுக்கொண்டார்.

## பொதுமக்கள் கருத்து:

**திரு சி. தங்கப்பாண்டியன், ஆசிரியர், காணிமடம்:**

சந்திரகலா மணல் நிறுவனம் மீது கருத்துக்களை கேட்கிற கூட்டத்திற்கு மாவட்ட ஆட்சியர் வருவதை தெரிந்து கூட்டத்திற்கு வந்துள்ளதாக குறிப்பிட்டார். இத்திட்டம் மீது இதற்கு முன்னர் நண்பர் (ஆலோசகர், சந்திரகலா பார்ம் புராடக்ட்ஸ் பிரைவேட் லிட்.) நன்மைகளை மட்டுமே சொன்னதாகவும், அதனால் எவ்வளவு பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பது பற்றி சொல்லவில்லை எனவும் கூறினார். ஏற்கெனவே இங்குள்ள விவி மினரல் நிறுவனத்தால் ஏற்பட்டிருக்கின்ற பாதிப்புகள் ஊர் மக்களுக்குத் தெரியும் எனவும், இப்பாதிப்புகள் நேரடியாக அன்றி மறைமுகமாக பாதிக்கும் எனவும் கூறினார். மேலும், அந்நிறுவனம் என்று தொடங்கியதோ அன்றிலிருந்து நிலத்தடி நீர் உப்பாக மாறி காணப்படுவதாகவும், அதனால் விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதோ இல்லையோ, இதனால் சுற்றுச்சூழல் கேடுகள், சர்க்கரை வியாதி வருவதாக தெரிவித்தார். நல்ல நீர் இல்லாமல் உள்ளதாகவும், நீரின் உப்பு அளவை அறிந்து சுகாதாரத்துறை செயல்படவேண்டும் எனவும் தெரிவித்தார். விவி மினரல் நிறுவனத்தின் மணல் லாறிகள் செல்கிறபொழுது, அவை சாலையில் அனுமதிக்கப்பட்ட அளவைக்காட்டிலும் அதிக அளவில் ஏற்றி செல்வதாகவும், இதனால் புதிய சாலைகள் 7 முதல் 8 ஆண்டுகள் வரை இருந்த நிலை போய், ஒரு ஆண்டிலேயே சீரழிந்து விடுவதாகவும் கூறினார். மேலும் மூன்று மாதத்திற்கு முன்பு இப்பகுதியில் மணல் லாறியால் பெரிய விபத்து ஏற்பட்டு, அதில் ஒருவர் இறந்ததாகவும், விவசாய நிலம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். விவி மினரல் நிறுவனம் வருவதற்கு முன்பு அழகாக

இருந்த கடற்கரை, இன்று பாறையாகவும், 10 மீ. ஆழம் தோண்டுவதால் 100 மீட்டருக்கு மேலாக கடல் நீர் வெளியே வந்துள்ளதாகவும், அதனால் சுனாமியின்போது நீர் ஊர்வரை வெளி வந்ததாகவும் கூறினார். ஏற்கெனவே அந்நிறுவனத்தின் மீது மாவட்ட ஆட்சியரகத்தில் மனுக்கள் அளித்துள்ளதாகவும் தெரிவித்தார். இன்று, இந்த புதிய நிறுவனம் வருவதால், 50 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதாக குறிப்பிட்டதை, ஏற்கெனவே இப்பகுதியில் வேலை ஆட்கள் தட்டுப்பாடு உள்ளதாகவும், அதனால் கடற்கரை செம்மையாக இருப்பதற்கு, இந்நிறுவனம் வருவது பிடிக்கவில்லை எனவும், வருவதை மறுப்பதாகவும் தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த திரு கே. சேகர், ஆலோசகர், தி/ள். சந்திரகலா பார்ம் புராடக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் பதிலளிக்கும்போது, இந்நிறுவனம் பெரிய நிறுவனமாக இல்லை எனவும், இங்கு பெரிய சுரங்கம் அமையவில்லை எனவும், 5.5 ஏக்கர் அளவில் மட்டுமே சுரங்கம் அமையவுள்ளதாகவும், அதனால் நாள் ஒன்றிற்கு ஒரு லாறி லோடு மணல் மட்டும் செல்ல இருப்பதாகவும், திட்டம் அமையவுள்ள இடம் கடற்கரையில் இல்லை எனவும், சொந்த நிலத்தில் மட்டுமே திட்டம் அமைய உள்ளதாகவும் தெரிவித்தார். மேலும், சுரங்கமானது அதிகபட்சம் 2.5 மீட்டர் ஆழம் மட்டுமே அமையப்பட இருப்பதால், சுரங்கத்தினால் நிலத்தடி நீர் பாதிக்கப்பட வாய்ப்பு இல்லை எனவும், சொந்த நிலத்தில் மட்டுமே நடவடிக்கைகள் இருப்பதால் பாதிப்பு இல்லை எனவும் தெரிவித்தார்.

**திரு நாராயணன், வாரியூர், அஞ்சுகிராமம்:**

ஏற்கெனவே, விவி மினரல் நிறுவனத்தினால் இப்பகுதி பொது மக்கள் 20 அடி ஆழ ஆழ்துளை கிணறு அமைத்த நிலைமை மாறி, இன்று 80 அடி ஆழ ஆழ்துளை கிணறு அமைத்தாலும் உப்பு நீராகவே வருவதாக கூறினார். மேலும், ரஸ்தாகாட்டில் மீண்டும் மணல் அள்ளுவதற்கு இந்த நிறுவனத்திற்கு அனுமதி கொடுத்தால், அருகிலுள்ள கிராமங்களில் நிலத்தடி நீர் உப்பு நீராகவே மாறிவிடும் என்று தெரிவித்தார். விவி மினரல் நிறுவனத்தாரால் ஏற்கெனவே அஞ்சுகிராமம் பேரூராட்சிக்குட்பட்ட பல ஊர்களில் நிலத்தடி நீர் உப்பு நீராக மாறிவருகிறதாகவும், இத்திட்டத்தை ரத்து செய்யுமாறும் கூறினார்.

**திரு மகாலிங்கம், காணிமடம்:**

மணல் கம்பெனிகளால், இப்பகுதியில் உள்ள ஆட்களுக்கு நீர் கல்லடைப்பு வருவதாக தெரிவித்தார். ஏற்கெனவே சொன்னது போலன்றி இந்த திட்டம் அமையவுள்ள இடம் கழிவு நிலமாக இல்லாமல், தென்னை மரங்கள் உள்ளதாக தெரிவித்தார். ஏற்கெனவே புதுக்குளம் மற்றும் அழகப்பபுரம் பகுதியிலிருந்து ஆழ்துளை குழாயிலிருந்து குடிநீர் வருவதாகவும் தெரிவித்தார். மாவட்ட ஆட்சியர் அவர்கள் தற்பொழுது குடிநீர் எங்கிருந்து வருகிறது என்று கேட்டதற்கு, அழகப்பபுரம் பகுதியிலிருந்து வருவதாகவும், குடிதண்ணீர் கஷ்டமான நிலையில் இருப்பதாகவும், இத்திட்டம் வந்தால் அனைத்தும் உப்பு நீராக மாறிவிடும் என்றும், அதனால் அனுமதி வழங்க கூடாது எனவும் தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த திரு கே. சேகர், ஆலோசகர், தி/ள். சந்திரகலா பார்ம் புராடக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் பேசும்போது, இத்திட்டமானது பீச் இடத்தில் இல்லாததாலும், 2.5 மீட்டர் மட்டுமே தோண்டப்படுவதாலும், 4 முதல் 10 மீட்டர் ஆழத்தில் உள்ள நிலத்தடி நீர் பாதிக்கபடாது என்றும் தெரிவித்தார்.

இதற்கு மறுத்து கூறிய திரு நாராயணன், ஆலோசகர் கூறிய கருத்துக்கள் கேட்பதற்கு நன்றாகத்தான் உள்ளதாகவும், பக்கத்தில் 20 மீட்டர் ஆழம் வரை ஜேசிபி இயந்திரம் வைத்து தோண்டுவதாகவும் தெரிவித்தார். மேலும், இவர்கள் அவ்வாறுதான் சொல்வார்கள் எனவும், பின்நாளில் கடைபிடிக்க இயலாது என்றும் தெரிவித்தார்.

(மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் எத்தனை அடி வரை எடுத்தால் பாதிப்பு வராது என்று கேட்டதில், அவர்கள் சொல்லுகிற ஆழம் வரை பாதிப்பு ஏற்படாது என்றும் தெரிவித்தார். மேலும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், அதிகமாக தோண்டுகிறபொழுது பொதுமக்கள் கண்காணிப்பு குழு கொண்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் நேரடியாக சொல்லுமாறும், மக்களுக்கு முதல் முக்கியத்துவம் அளிக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.)

மேலும், திரு மகாலிங்கம் இங்கு உள்ள தண்ணீரை குடிப்பதால் கல் அடைப்பு வருவதாகவும், இத்திட்டம் வருவது சரியாக இருக்காது என்றும் குறிப்பிட்டார்.

**திருமதி ஆவுடையம்மாள், ஸ்ரீலட்சுமிபுரம்:**

இப்பகுதியில் குடிதண்ணீர் இல்லாமலும், அனைத்து நீரும் உப்பு நீராக மாறியும், சோறு பொங்க இயலவில்லை எனவும், பாத்திரங்களில் உப்பு படிவதாகவும், நல்ல தண்ணீர்

கிடைக்கவில்லை எனவும், அதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆவன செய்யுமாறும், இறக்கும் முன்பு நல்ல தண்ணீரை குடிக்க வேண்டும் என்றும் விருப்பம் தெரிவித்தார்.

**திரு எஸ். பி. பாலன், 7வது வார்டு உறுப்பினர், அஞ்சுகிராமம்:**

தான் உறுப்பினராக பதவியேற்று மூன்று ஆண்டுகள் ஆகின்றதாகவும், இந்த பேரூராட்சிக்கு குடிநீரானது 5 கி.மீ. –க்கு மேற்கே ஆழ்துளை கிணறு அமைத்து பெறுவதாகவும், மீண்டும் இந்த மணல் ஆலையை ஆரம்பிக்க அனுமதியளித்தால், மைலாடி தாண்டித்தான் ஆழ்துளை கிணறு அமைக்க வேண்டியிருக்கும் எனவும் குறிப்பிட்டார். மேலும், ஏற்கெனவே திரு மகாலிங்கம் அவர்கள் சொன்னதைப்போல், இப்பகுதியில் மக்களுக்கு (சிறுநீர்) கல்லடைப்பு, பாத்திரம் அழுக்குப்படிதல் நிலை வந்து கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார். விவி மினரல் நிறுவனம் இதற்கு காரணம் எனவும், பொதுமக்களும், அதிகாரிகளும் அதுபோல் சொல்கின்றார்கள் எனவும், இத்திட்டத்தை தடை செய்யுமாறும் கூறினார்.

**திரு சி. ராஜலிங்கம், 10வது வார்டு உறுப்பினர், கனகப்பபுரம்:**

ஏற்கெனவே, இப்பகுதியில் உள்ள தனியார் நிறுவனம் மணல் அள்ளுவதால், நேரிடையாகவும், மறைமுகமாகவும் ஏகப்பட்ட பாதிப்புகள், சொல்லமுடியாத பலவகை பாதிப்புகள் ஏற்படுவதாகவும், இதுகுறித்து எத்தனையோ முறை மனுக்கள் அளித்திருப்பதாகவும் தெரிவித்தார். மேலும், இப்பகுதியில் பத்து முதல் பன்னிரெண்டு வருடங்களுக்கு முன்பு நல்ல தண்ணீர் இருந்து வந்ததாகவும், விவசாயம் நன்கு இருந்ததாகவும் குறிப்பிட்டார். இப்பொழுது எல்லா இடத்திலும் உப்பு தண்ணீர் கிடைப்பதாகவும், தென்னை மரங்கள் பச்சையாக இருந்தாலும் காய்ப்பது இல்லை எனவும் தெரிவித்தார். மேலும் கடல் நீர் 150 மீட்டர் 200 மீட்டர் வரை உள்ளே வந்துள்ளதாகவும், அடையாளம் தெரியாமல் உள்ளதாகவும், ஏற்கெனவே ஒரு ஆலை வந்ததன் பாதிப்பு அதிகமாக இருப்பதனால் இந்த திட்டம் வரும்பொழுது பாதிப்பு மிக அதிகமாக இருக்கும் எனவும், பொதுமக்களுக்கு நல்ல பலன் கிடைக்காது எனவும் தெரிவித்தார்.

**திரு எ. வையாபுரி, பொது மேலாளர், தி/ள். சந்திரகலா பார்ம் புராடக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்:**

அரிய மணல் எடுப்பது சம்பந்தமாக, ஏற்கெனவே இப்பகுதியில் குடிநீர் பாதிப்பு ஏற்படுவதாக பொதுமக்கள் தெரிவித்ததையும், ஒரு தனியார் நிறுவனத்தால் இந்த பகுதியில் துன்பப்படுவதாக தெரிவித்ததையும் குறிப்பிட்டு, தங்களது நிறுவனத்தினால், பெறப்படும் அனுமதியின்படியும், சட்ட விதிகளுக்கு உட்பட்டும், சொந்த நிலத்தில் நடத்தியும், குடிநீர் பாதிப்பு வராதவாறும், சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு குந்தகம் வராதவாறு தொழில் செய்வோம் என உறுதி அளித்தார். மேலும், ஏற்கெனவே சொன்னபடி, இப்பகுதியில் வேலை வாய்ப்பை உருவாக்கவும், சமூக நல திட்டத்தின்படி உரியன செய்வோம் எனவும் தெரிவித்தார்.

மேலும், தங்கள் நிறுவனம் இத்தொழிலை நடத்துவதனால், நிலத்தடி நீருக்கோ, சுற்றுச்சூழலுக்கோ எவ்வித குந்தகமும் வராது என்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் முன்னிலையில் உறுதியளிப்பதாக தெரிவித்தார்.

(மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் எடுக்கப்படும் மணல் அளவு மற்றும் அதன் விலை விபரம் பற்றியும் கேட்கையில் நிறுவனத்தின் ஆலோசகர் அவர்கள் நாள் ஒன்றிற்கு 8 டன் அபூர்வ கனிமமும், அதன் மதிப்பு ரூபாய் நாற்பதாயிரம் ஆக இருக்கும் எனவும் தெரிவித்தார். மாவட்ட ஆட்சியர் அவர்கள் அது குறித்த விபரங்களை எழுத்துபூர்வமாக அளிக்குமாறும் கூறினார்.)

## பொதுமக்கள் கேட்புரை கூட்ட நடவடிக்கைகள் மீதான சுருக்கம்:

**திரு பூ. கிருபானந்த ராஜன், உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், நாகர்கோவில்:**

பொது மக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் நடவடிக்கைகள் பற்றி சுருக்கி கூறியபோது, திரு எ. வையாபுரி, பொது மேலாளர், தி/ள். சந்திரகலா பார்ம் புராடக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் பங்குச்சந்தையில் ஈடுபடுவதையும், அவர்களது நிறுவனம் 2003-ம் ஆண்டு அளித்த விண்ணப்பத்தின் பேரில், இந்த மக்கள் கேட்பு கூட்டத்தை நடத்துவதையும், அவர்களுக்கு 25 ஏக்கர் நிலம் இருப்பதையும், 2.135 ஹெக்டேர் அளவில் அரிய மணல் சுரங்க அனுமதி வேண்டியிருப்பது பற்றி பேசியதையும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து, நிறுவனத்தின் ஆலோசகர் திரு சேகர் அவர்கள் பொதுமக்கள் கேட்புரையின் அவசியம் பற்றியும், சுரங்க அமைவிடம், பிராந்திய வரைபடம், அதன் சுற்றுச்சூழல் குறித்து பேசியதையும், மனிதர்களால் மட்டுமே சுரங்கப்பணி செய்யப்பட இருப்பது பற்றியும்,

இயந்திரங்கள் எதுவும் பயன்படுத்தபடாது எனவும், 10 கி.மீ. தொலைவுக்கு உள்ள முக்கிய இடங்கள் பற்றியும் தெரிவித்ததை குறிப்பிட்டார்.
திட்ட அமைவிடத்தில், பெரிய ஓடைகளோ, நதிகளோ இல்லை என குறிப்பிட்டதை தெரிவித்தபோது, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் திட்டப்பகுதி வரைபடத்தில் உள்ள நீர் நிலைகள் இருப்பதை சுட்டி காண்பித்தபோது, நிறுவனத்தின் ஆலோசகர், திட்ட அமைவிடத்தில் நீர் நிலைகள் எதுவும் குறுக்காக செல்லவில்லை என தெரிவித்தார்.
மேலும், ஆலோசகர், சுரங்க முறை, திடக்கழிவு மேலாண்மை, சுற்றுச்சூழல் மேலாண்மை, திட்டத்தின் தாக்கம் மற்றும் மேலாண்மை, திட்ட ஒதுக்கீடு ஆகியவை பற்றி சொல்லியதையும் குறிப்பிட்டார்.
தொடர்ந்து, பொதுமக்கள் சார்பாக திரு சி. தங்கபாண்டியன், ஆசிரியர் அவர்கள் ஏற்கெனவே உள்ள மணல் ஆலையினால் நிலத்தடி நீர் ஏற்கெனவே குறைந்து வந்ததையும், சுகாதாரக்கேடுகள் ஏற்படுவதையும், சாலைகள் அடிக்கடி பாதிப்படைவதையும், அதனால் விபத்துக்கள் ஏற்படுவதையும், விவசாயம் பாதிக்கப்படுவதையும், அழகான கடற்கரை பாறையாக மாறியதையும், பாதிப்புகள் அதிகமாக உள்ளதையும், ஆகவே இத்திட்டம் வருதல் கூடாது என்று கூறியதையும் குறிப்பிட்டார்.
மேலும், அதற்கு பதிலளித்த ஆலோசகர், 5.5 ஏக்கர் நிலத்தில் மட்டும் திட்டம் செயல்பட இருப்பதையும், நாள் ஒன்றிற்கு ஒரு லாறி லோடு மட்டுமே மணல் எடுக்க இருப்தையும், திட்டம் கடற்கரை நிலத்தில் இல்லை என்பதையும், அவர்களுடைய சொந்த நிலத்தில் மட்டுமே செயல்பட இருப்பதாக சொன்னதையும் குறிப்பிட்டார்.
தொடர்ந்து, திரு நாராயணன் அவர்கள் பேசுகையில், நிலத்தடி நீர் பாதிக்கபட்டு இருப்பதையும், பக்கத்திலுள்ள பகுதிகள் பாதிக்கப்பட்டிருப்பதையும் பற்றி பேசியதை குறிப்பிட்டார்.
திரு மகாலிங்கம், காணிமடம் அவர்கள் அப்பகுதியில் உள்ள குடிநீரினால் நிறையபேருக்கு சிறுநீரக கல் இருப்பதையும், தென்னை மரங்கள் பாதிக்கப்பட்டிருப்பதையும், வெளியூரிலிருந்து குடி தண்ணீர் வருவதால் திட்டம் வேண்டாம் என்று பேசியதையும், குறிப்பிட்டார்.
அதற்கு நிறுவனத்தின் ஆலோசகர் மீண்டும், 2.5 மீட்டர் ஆழத்திற்கு மட்டுமே சுரங்கம் எடுக்கப்படும் என்றும், அதனால் பெரிய பாதிப்பு வராது என்று கூறியதையும் குறிப்பிட்டார்.
மேலும், திருமதி ஆவுடையம்மாள் அவர்கள் நிலத்தடி நீர் பாதிப்பு பற்றி குறிப்பிட்டபோது, அதனுடன் நிலத்தடி நீர் உப்பு தண்ணீராக மாறுவதாகவும் கூறியதை குறிப்பிட வேண்டும் என்று திரு சி. தங்கபாண்டியன், ஆசிரியர், காணிமடம் அவர்கள் சுட்டிக்காண்பித்ததை ஏற்று, அவ்வாறே உப்பு தண்ணீராக மாறுவதாகவும் பதிவு செய்வதாக கூறினார். மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மணல் அள்ளுவதை கண்காணிக்க, கிராமத்தினரை உள்ளடக்கிய கண்காணிப்பு குழு அமைக்கவும் ஆலோசனை வழங்கியதை குறிப்பிட்டார்.
திரு எஸ்.பி. பாலன், பேரூராட்சி மன்ற உறுப்பினர் அவர்கள் இப்பகுதியில் மணல் ஆலைகள் மீண்டும் அனுமதித்தால் நிலத்தடி நீர் பாதிக்கபடும் என்றும், சிறுநீரக கல்லடைப்பு அதிகமாக ஏற்படும் என்று பேசியதையும் குறிப்பிட்டார்.
திரு. ராஜலிங்கம், பேரூராட்சி மன்ற உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, ஏற்கெனவே உள்ள மணல் ஆலைகளினால், நேரிடையான மற்றும் மறைமுகமான சுற்று சூழல் பிரச்சினைகள் ஏற்படுவதாகவும், உப்பு நீரினால் தென்னை மரங்கள் கெடுவதையும், 150 மீட்டர் முதல் 200 மீட்டர் வரை கடல் நீர் உள்புகுந்ததாக கூறியதையும், பாதிப்பு அதிகமாக வருவதால், இத்திட்டம் வரவேண்டாம் என்று பேசியதையும் குறிப்பிட்டார்.
திரு எ. வையாபுரி, பொது மேலாளர், தி/ள். சந்திரகலா பார்ம் புராடக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், அவர்கள் குடிநீர் பாதிப்பு ஏற்படாமல், இத்திட்டமானது அனுமதியின்படியும், சட்ட விதிகளுக்கு உட்பட்டு நடக்கயிருப்பதையும், திட்டம் சொந்த நிலத்தில், சுற்றுச்சூழலை பாதுகாத்து நடைபெற இருப்பதாகவும், ஓரளவிற்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று சொன்னதையும் குறிப்பிட்டார்.
மேலும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பிற கருத்துக்கள் எதுவுமிருப்பின் பொதுமக்கள் பதிவு செய்யலாம் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.
இறுதியாக, உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், நாகர்கோவில் அவர்கள் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும், பொதுமக்களுக்கும் நன்றி கூற, பொதுமக்கள் கேட்புரை கூட்டம் நிறைவுற்றது.

மேலும், திட்டம் அமைப்பது தொடர்பாக மொத்தம் 5 (ஐந்து) மனுக்கள் எழுத்து பூர்வமாக பெறப்பட்டு அது குறித்த அறிக்கையானது இணைப்பு II – ன்படி இணைக்கப்படுகின்றது.

**கருத்து சுருக்கம்:** நிலத்தடி நீர் குறித்து எதிர்நோக்கும் பாதிப்புகளின்மீது, அதிகமான கவலைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையில், மாவட்டம் முழுவதுமான நிலத்தடி நீர் தகவல்கள் தரப்பட்டுள்ளதே தவிர, திட்ட அமைவிடம் மற்றும் அதனை சுற்றியுள்ள இடங்களின் நிலத்தடி நீர் விபரங்கள் கொடுக்கப்படவில்லை. இக்கருத்தின் மீது, மேற்கொண்டும் ஆய்வுகள் தேவைப்படுகின்றது. மேலும், திட்டத்தினை அனுமதிக்கும் முன்பு, நிலத்தடி நீர் வாரியத்திடமிருந்து கருத்துக்கள் பெறப்பட வேண்டும்.

இணைப்பு – I – பங்குபெற்ற பொதுமக்கள் விபரம்.
இணைப்ப – II – எழுத்துபூர்வமாக பெறப்பட்ட மனுக்களின் விபரம்

ஒ/ம். (பூ. கிருபானந்த ராஜன்),
உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
நாகர்கோவில்.

ஒ/ம். (இராஜேந்திர ரத்னூ, இ.ஆ.ப.),
மாவட்ட ஆட்சியர்,
கன்னியாகுமரி மாவட்டம்,
நாகர்கோவில்.